# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

பண்ணாரி (அஞ்சல்), சத்தியமங்கலம் (வழி), ஈரோடு மாவட்டம் - 638 401.



## குண்டம் பெருந்திருவிழா அழைப்பிதழ்

10.04.2017 திங்கட்கிழமை இரவு

**குண்டம் திருவிழா**

17.04.2017 திங்கட்கிழமை

**மறுபூசைத் திருவிழா**

பண்ணாரி தாயே போற்றி கருணைக் கடலே போற்றி

அம்மா தாயே பண்ணாரி, அன்னை நீயே ஓங்காரி,

சும்மா இருந்தால் பயனில்லையே, உன்னைச் சுற்றி வந்தால் வினையில்லையே

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் திருத்தல வரலாறு



அனைத்து சக்திகளுக்கும் ஆதாரமாக இருப்பது பராசக்தியாகும். அப்பராசக்தியே பல்வேறு பெயர்களுடன் பல்வேறு ஸ்தலங்களில் குடி கொண்டுள்ளாள். அச்சக்தியே கொங்கு நாட்டின் வடமேற்கு எல்லை அருகில் மைசூர் செல்லும் வழியில் பிரதானமாக வீற்றிருக்கும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாகும்.

இத்திருத்தலம் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14 கிலோ மீட்டர் தொலைவில் அடர்ந்த வனத்தினிடையே அமைந்துள்ளது. நான்கு பக்கங்களும் வனத்தால் சூழப்பட்டு உள்ளது. அடர்ந்த காட்டுப் பகுதியில் யானைகளும், காட்டுப் பன்றிகளும், மான்களும், நரிகளும், வண்ண மயில்களும், குரங்குகளும், முயல்களும், கரடிகளும் மற்றும் மிகக்கொடிய விஷ ஜந்துகளும் சர்வசாதாரணமாக உலாவும். இத்திருத்தலத்தில் தெற்கு பார்த்த வண்ணமாக எழுந்தருளியுள்ள அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் சுயம்புலிங்க வடிவமாக உள்ளாள்.



இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு இவ்விடம் அடர்ந்த வனப்பகுதியாக இருந்தது. இவ்விடத்தில் வற்றாத காட்டாறு ஓடிக்கொண்டே இருக்கும். காட்டாற்றின் பெயரோ தோரணப்பள்ளம் என்பதாகும். இக்காட்டாறு இத்தலத்தின் மேற்குப்புறத்தில் உள்ளது. திம்பம் மலையின் அடிவாரத்தில் தென்குமரி தெய்வத்தின் அவதாரம் நிகழப்போகிறது என்பதை உலகிறுக்கு அறிவிக்கவோ என்னவோ இக்காட்டாற்றின் துறையில் பசுவும், புலியும் ஒரே இடத்தில் நீர் குடிக்கும் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.




இச்சுற்று வட்டார கிராம மக்கள் தாங்கள் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கு இவ்வனப் பகுதிகளுக்குச் செல்வது வழக்கம். இம்மக்கள் மாடுகளுக்குப் பட்டிகள் அமைத்து வனப்பகுதியிலேயே தங்கிக் கொள்வார்கள். தினசரி காலையில் மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வார்கள். பின்னர் மாலையில் ஓட்டி வந்து பட்டியில் அடைப்பார்கள். காலையிலும், மாலையிலும் பாலைக் கறந்து மாட்டின் உரிமையாளருக்குக் கொடுப்பார்கள்.

tnhrce.org



ஒரு பட்டியிலிருந்த காராம்பசு ஒன்று கறக்கச் சென்றால் கறப்பதற்கு நில்லாமல் தன் கன்றுக்கும் கொடுக்காமல் இருப்பதை மாடுகளை மேய்ப்போன் அறிந்தான். மறுநாள் மாட்டினைப் பின்தொடர்ந்து சென்று கவனித்தான். அப்பசு தினந்தோறும் தன் பாலை ஒரு வேங்கை மரத்தின் அடியில் கணாங்குப் புற்கள் சூழ்ந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன்னிச்சையாகப் பொழிவதை மறைவிலிருந்து பார்த்தான். அந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அவன் மறுநாள் சுற்றுவட்டார கிராம மக்கள், ஊர் பெரியோர்களிடம் விபரத்தைச் சொல்லி அனைவரையும் அழைத்துக்கொண்டு மாட்டினைப் பின்தொடர்ந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் காராம்பசு பால் சொரிவதைக் காண்பித்தான். அனைவரும் இவ்வரிய நிகழ்ச்சியினைக் கண்ணுற்று மெய்சிலிர்த்து நின்றார்கள். இது தெய்வத்தின் திருவிளையாடல் என்றெண்ணிக் கைகூப்பித் தொழுதார்கள்.



மக்கள் அனைவரும் அவ்விடத்தைச் சுத்தம் செய்யுங்கால் கணாங்குப் புற்கள் சூழ்ந்த புற்றும், அதனருகில் சுயம்புலிங்கத் திருவுருவும் வேங்கை மரத்தின் அடியில் இருப்பதைக் கண்டார்கள். அப்போது அக்கூட்டத்தில் இருந்த ஒருவருக்கு தெய்வ அருள் உண்டாகி தான் கேரளா மாநிலம் வண்ணார்க்காடு (மண்ணார்க்காடு) என்ற ஊரிலிருந்து பொதிமாடுகளை ஓட்டிக்கொண்டு மைசூர் செல்லும் மக்களுக்கு வழித்துணையாக வந்தேன் என்றும், எழில் மிகுந்த இவ்வியற்கைச் சூழலில் தான் தங்கி விட்டதாகவும், தன்னை இனிமேல் பண்ணாரி மாரியம்மன் எனப் போற்றி வழிபட்டு வாருங்கள் எனவும் அருள் வாக்கில் கூறினார்.



அன்னையின் அருள்வாக்கின்படி அவ்விடத்தில் கணாங்குப் புற்கள் கொண்டு ஒரு குடில் அமைத்து, கிராமிய முறைப்படி நாள்தோறும் பண்ணாரி அன்னையை வழிபட்டு வந்தனர். பின்பு ஊர் மக்களும், பெரியதனக்காரர்களும் அன்னையின் சிறப்புக் கருதி அன்னைக்கு விமானத்துடன் கூடிய சிறு கோவில் அமைத்து, பத்மபீடத்துடன் திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர். அம்பிகையை பயபக்தியுடன் சதா துதிக்கும் அன்பர்களுக்கு வேண்டியதை வேண்டிய வண்ணம் அருள்பாலிக்கின்றாள். இதனால் பக்தர்கள் வந்து அபிஷேக ஆராதனைகள் செய்தும், பொங்கலிட்டும், முடிகளைந்தும், உருள்தண்டம் செய்தும் வழிபடுகின்றனர். அமாவாசை, ஞாயிறு, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அன்னையை வழிபாடு செய்கின்றனர்.

**இத்திருக்கோயில் ISO 9001:2008 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது**

மின் அஞ்சல் மூலம் பதிவு செய்தல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தங்கக் கவசக் கட்டணம் | : | ரூ. 750/- | அன்னதானம் | : | ரூ. 5000/- |
| அர்ச்சனைக் கட்டணம் | : | ரூ. 100/- | அபிசேகம் | : | ரூ. 500/- |
| காலப்பூஜை அபிசேகக் கட்டணம் | : | ரூ. 500/- | இலவசப் பிரசாதம் | : | ரூ. 1500/- |

இணையதள முகவரி : www.bannariammantemple.tnhrce.in

இ-மெயில் : bannariammansty@gmail.com

பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குபவர்கள் பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைக் கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது.

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

பண்ணாரி (அஞ்சல்), சத்தியமங்கலம் (வழி), ஈரோடு மாவட்டம் - 638 401.

தொலைபேசி எண் : 04295 - 243289

## 2017 ஆம் ஆண்டு
## பங்குனிக்குண்டம் பெருந்திருவிழா அழைப்பிதழ்

தொல்லுலகில் மானிடரின் தோற்றமொடு தோன்றி வளர்
நல்ல தமிழ் நடைமாறிக் கன்னடமாம் எல்லையிலே
வல்லுருவ யானை வளர் பண்ணாரி பாங்காடே
இல்லிடமாய்க் கொண்டாய் நீ என் தாயே அருள் மாரி
ஓங்கு புகழ் உன்னருளால் உத்தமர்கள் எண்ணற்றோர்
ஈங்கு வந்து இணைந்துந்தன் எழில் விழாக் கொண்டாடும்
வீங்குமதிப் பங்குனியில் நற்றிங்கள் நாளினிலே
பாங்காடும் பட்டணம் போல் பண்ணாரி காட்சி கொள்ளும்.

tnhrce.org

பேரன்புடையீர், வணக்கம்.

நிகழும் துர்முகி வருடம் பங்குனித் திங்கள் 14- ஆம் நாள் (27-03-2017) திங்கட்கிழமை முதல் சித்திரை திங்கள் 4- ஆம் நாள் (17-04-2017) திங்கட்கிழமை முடிய இத்திருக்கோயிலில் திருக்குண்டம் பெருந்திருவிழா பின்வரும் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி நடைபெற உள்ளது. அன்பர்கள் அனைவரும் வருகை தந்து திருவிழாவினைச் சிறப்புறச் செய்து அன்னை அருள்மிகு பண்ணாரி மாரியம்மனின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,

**வீ. புருசோத்தமன்**
**இரா. ராஜப்பன்**
**ராஜாமணி தங்கவேல்**
**புஷ்பலதா கோதண்டராமன்**
**வீ. மகேந்திரன்**
(பரம்பரை அறங்காவலர்கள்)

**நா. பழனிக்குமார்** பி.எஸ்.சி., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

மற்றும்
திருக்கோயில் பணியாளர்கள்

குண்டம் பெருந்திருவிழாவில்

மாண்புமிகு பள்ளிகல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர்
திரு. **கே.ஏ. செங்கோட்டையன்** அவர்கள்

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
திரு. **கே.சி. கருப்பணன்** அவர்கள்

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **சேவூர் எஸ். இராமச்சந்திரன்** அவர்கள்

மற்றும்

முனைவர். **சி. கோபால கிருஷ்ணன்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், நீலகிரி.

திருமதி. **வி. சத்தியபாமா** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர்.

திரு. **எஸ். செல்வகுமாரசின்னையன்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், ஈரோடு.

திரு. **கே.வி. இராமலிங்கம்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், ஈரோடு மேற்கு.

திரு. **தோப்பு என்.டி.வெங்கடாசலம்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், பெருந்துறை.

திரு. **கே.எஸ்.தென்னரசு** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், ஈரோடு கிழக்கு.

திரு. **வே.பொ. சிவசுப்பிரமணி** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், மொடக்குறிச்சி.

திரு. **இ.எம்.ஆர்.ராஜா (எ) ராஜாகிருஷ்ணன்** அவர்கள்,
சட்டமன்ற உறுப்பினர், அந்தியூர்.

திரு. **சு.ஈஸ்வரன்** அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், பவானிசாகர்.

திரு. **கே.பழனிச்சாமி** அவர்கள்
துணைக் கண்காணிப்பாளர், காவல் துறை,
சத்தியமங்கலம்

திரு. **சு.கிருஷ்ணன்** அவர்கள்
வருவாய் வட்டாட்சியர், சத்தியமங்கலம்

திரு. **இரா.பழனிச்சாமி** அவர்கள்
மண்டலத் தணிக்கை அலுவலர் (கூ.பொ),
இந்து சமய அறநிலையத்துறை, ஈரோடு.

திருமதி. **ஜி.டி.கமலா** அவர்கள்
ஆய்வர் ( அயல்பணி ) பண்ணாரி.

திரு. **அபூர்வ வர்மா** இ.ஆ.ப., அவர்கள்
முதன்மைச் செயலாளர், சுற்றுலா பண்பாடு மற்றும்
அறநிலையத்துறை, சென்னை.

முனைவர். **மா. வீர சண்முக மணி** இ.ஆ.ப. அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

டாக்டர். **எஸ். பிரபாகர்** இ.ஆ.ப. அவர்கள்
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு.

டாக்டர். **ஆர். சிவக்குமார்** அவர்கள்
மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஈரோடு.

திருமதி. **நா.திருமகள்** அவர்கள்
கூடுதல் ஆணையர் (பொது மற்றும் விசாரணை)
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

திருமதி. **மா.கவிதா** அவர்கள்
கூடுதல் ஆணையர் (திருப்பணி)
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.

திரு. **அ. இளம்பரிதி** அவர்கள்
இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, கோவை

திரு. **வெ.சதீஸ்** அவர்கள்
மாவட்ட வருவாய் அலுவலர், ஈரோடு.

திரு. **எஸ்.வி.குமார்** அவர்கள்
சார் ஆட்சியர் (பொறுப்பு), கோபிசெட்டிபாளையம்.

திரு. **ப.முருகையா** அவர்கள்
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, ஈரோடு.

திரு. **சி. கருணாநிதி** அவர்கள்
உதவி ஆணையர் ( நகை சரிபார்ப்பு ),
இந்து சமய அறநிலையத்துறை, கோவை

திரு. **இரா. ரவிக்குமார்** அவர்கள்
ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை, சத்தியமங்கலம்

மற்றும் ஆன்றோர்களும் சான்றோர்களும் பங்கேற்றுச் சிறப்பிக்க உள்ளார்கள்.

tnhrce.org

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| **27.03.2017**<br>திங்கள் - இரவு | **திருப்பூச் சாட்டுதல்** |
| **28.03.2017**<br>செவ்வாய் - இரவு | நித்தியப்படி பூஜை<br>இரவு 12.00 மணியளவில் அம்பிகை சிக்கரசம்பாளையம் எழுந்தருளல். |
| **29.03.2017**<br>புதன் - காலை | சிக்கரசம்பாளையத்தில் அம்பிகை திருவீதி உலா. இரவு அம்பிகை புதூர் எழுந்தருளல். இரவு புதூர் மாரியம்மன் திருக்கோயிலில் தங்குதல். |
| **30.03.2017**<br>வியாழன் - காலை | அம்பிகை வெள்ளியம்பாளையம் எழுந்தருளல். மாலை கொத்தமங்கலம் வழியாக இரவு தொட்டம்பாளையம் எழுந்தருளல். திரு. எம். ரங்கசாமி சகோதரர் சார்பில் அன்னதானம். இரவு அருள்மிகு வேணுகோபாலசுவாமி திருக்கோயிலில் தங்குதல். |
| **31.03.2017**<br>வெள்ளி - காலை | அம்பிகை வெள்ளியம்பாளையம்புதூர் எழுந்தருளல். இரவு அக்கரைத் தத்தப்பள்ளி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் தங்குதல். |
| **01.04.2017**<br>சனி - காலை | உத்தண்டியூர், அய்யன்சாலை வழியாக பகல் 12.00 மணியளவில் இராமாவரத்தில் உள்ள திரு. முத்துவேலப்பக்கவுண்டர் மற்றும் திரு. இளஞ்செழியன் தோட்டத்தில் ஏழைகளுக்கு அன்னதானம். தாண்டாம்பாளையம், இக்கரை நெகமம், கெஞ்சனூர் திருவள்ளுவர் நகர் (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு) வழியாக இரவு அம்பிகை சத்தியமங்கலம் எழுந்தருளல். இரவு வடக்குப்பேட்டை அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயிலில் தங்குதல். |
| **02.04.2017**<br>ஞாயிறு - காலை | அம்பிகை சத்தியமங்கலம் வடக்குப்பேட்டை, கடைவீதி, அக்ரஹாரம், திருவீதி உலாக்காட்சி. இரவு அருள்மிகு வேணுகோபாலசுவாமி திருக்கோயிலில் தங்குதல். |
| **03.04.2017**<br>திங்கள் - காலை | அம்பிகை ரங்கசமுத்திரம், எஸ்.ஆர்.டி., கோணமூலை, காந்திநகர் மற்றும் திம்மையன்புதூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வழியாக புதிய எக்ஸ்டென்சன் வீதி அருகில் உள்ள அருள்மிகு மேற்குப்புற முத்துமாரியம்மன் திருக்கோயில் வந்தடைதல் அங்குள்ள அனைத்து ஊர் மக்களுக்கும் காட்சி அளித்தல். இரவு கோட்டுவீராம்பாளையம் அருள்மிகு சௌடேஸ்வரியம்மன் திருக்கோயிலில் தங்குதல். |
| **4.04.2017**<br>செவ்வாய் - காலை | அம்பிகை சத்தியமங்கலம் திருவீதி உலாக்காட்சி முடித்து அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் வழியாக பட்டவர்த்தி அய்யம்பாளையம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் எழுந்தருளல். அங்கு அன்னதானம் முடித்து புதுவடவள்ளி, புதுக்குய்யனூர், பசுவபாளையம், புதுப்பீர்க்கடவு, பட்டரமங்கலம், ராஜன்நகர் வழியாக இரவு பண்ணாரி வந்தடைதல்.<br>அன்று இரவு **திருக்கம்பம் சாட்டுதல்.** |
| **05.04.2017**<br>புதன் - காலை<br>**09.04.2017**<br>ஞாயிறு முடிய | நித்தியப்படி பூஜை.<br>தினசரி இரவு 7.00 மணிக்குமேல் மலைவாழ் மக்கள் தாரை, தப்பட்டை, பீனாட்சி வாத்தியத்துடன் அம்மன் புகழ் பாடும் களியாட்டம். |
| **10.04.2017**<br>திங்கள் - இரவு | **திருக்குண்டம் திருவிழா**<br>இரவு 1.00 மணிக்கு திருக்குளம் சென்று அம்மன் அழைத்தல், வரம் பெறுதல். |

| | |
|---|---|
| **11.04.2017**<br>செவ்வாய் | அதிகாலை 4.00 மணிக்கு<br>**திருக்குண்டம் இறங்குதல்** |
| **12.04.2017**<br>புதன் | பகல் 12.00 மணிக்கு : **மாவிளக்கு**<br>இரவு 10.00 மணிக்கு : **"புஷ்பரதம்"** சிம்ம வாகனத்தில் அம்மன் திருவீதி உலா.<br>புஷ்பரத அலங்காரம், கரக ஆட்டம், நையாண்டி மேளம்<br>உபயம் : திரு. **கணேஷ்குமார் விஜயலட்சுமி**, ஹோட்டல் புளுநைல், பல்லாவரம், சென்னை. |
| **13.04.2017**<br>வியாழன் | **மஞ்சள் நீராட்டு விழா மற்றும் அன்னதானம்**<br>மதியம் : அன்னதானம் வழங்குதல் : **டி.டி.கே. அறக்கட்டளை**, சென்னை.<br>ஏற்பாடு : திரு. **பி.எல்.எஸ். வெங்கடாசலம்**, த/பெ.பி.எல். சிவனப்பகவுடர், ராஜன்நகர்). |
| **14.04.2017**<br>வெள்ளி | மாலை 6.00 மணி : **திருவிளக்கு வழிபாடு**<br>கட்டளைதாரர் : திரு. **எம்.என். ஜானகிராமன்**, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2.<br>மாலை 7.00 மணி : **தங்கரதம் புறப்பாடு** கோயில் நிர்வாகம். |
| **17.04.2017**<br>திங்கள் | **மறுபூசைத் திருவிழா** |

## முக்கியக் குறிப்புகள்

tnhrce.org

1. ஒவ்வொரு தமிழ் மாதக் கடைசி வெள்ளிக்கிழமையன்று பெண் பக்தர்கள் கலந்து கொள்ளும் திருவிளக்குப் பூஜை நடைபெறுகிறது.
2. இத்திருக்கோயில் உச்சிக்காலக் கட்டளைப் பூஜைக்கு ரூ.1001/- செலுத்தினால் அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டிற்கு ஒரு நாள் கட்டளைதாரர் விரும்பும் நாளில், விரும்பும் பெயரில் பூஜை செய்யப்பட்டு திருவருட் பிரசாதம் வழங்கப்படுகிறது.
3. குண்டம் திருவிழாவின் போது குண்டம் இறங்கும் பக்தர்களுக்குச் சுத்தமான, சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்ய விரும்பும் அன்பர்கள் திருக்கோயில் அலுவலகத்தினைத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. திருக்குண்டத்திற்கு எரிகரும்பு உபயம் செய்ய விரும்பும் பக்தர்கள் திருக்கோயிலுக்குத் தங்களால் இயன்றளவு ஊஞ்சல் மற்றும் வேம்பு மரங்களை எரிகரும்பாக வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குபவர்கள் பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைக் கண்டிப்பாக உபயோகப் படுத்தக்கூடாது.
6. அரசாலும், தெய்வீகத்தாலும் எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்வுகளுக்குத் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

## தினசரி பூசைக் காலங்கள்

| | |
|---|---|
| காலசந்தி | : 5.30 மணி (காலை) |
| உச்சிக்காலம் | : 11.30 மணி (மதியம்) |
| சாயரட்சை | : 5.30 மணி (மாலை) |
| அர்த்தசாமம் | : 8.30 மணி (இரவு) |

### நடைதிறப்பு மற்றும் திருக்காப்பிடுதல்

திருக்கோயில் அடர்ந்த வனப்பகுதியில் எழுந்தருளப் பெற்றுள்ளது. திருக்கோயில் மரபு மற்றும் பழக்கவழக்கப்படி திருக்கோயில் நடை அதிகாலை 5.30 மணிக்கு திறக்கப்பட்டு, இரவு 9.00 மணிக்கு திருக்காப்பிடப்படுகிறது.

### இதர விசேஷ நாட்கள்

அமாவாசை, பௌர்ணமி, நவராத்திரி, தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு நாட்கள், அனைத்து சங்கடஹர சதுர்த்தி (சந்தான விநாயகர் சன்னதி), ஆடிப்பெருக்கு, ஆடி மாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகள் தீபாவளி, மற்றும் தைப் பொங்கல் போன்றவை பக்தர்கள் அதிகம் வருகை புரிந்து தரிசனம் செய்யும் நாட்களாகும். மேற்படி விசேஷ நாட்களில் பக்தர்கள் வருகை புரிந்து அம்மனை தரிசனம் செய்து அம்மன் அருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# குண்டம் திருவிழா கலைநிகழ்ச்சிகள்

## 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை

**இரவு 6.00 மணி**
**திருக்கோயில் வளாகம்**

### பட்டிமன்றம்

நடுவர் : செம்மொழிச் செல்வர். T.V. புகழ் கவிஞர் திலகம் **மானூர் புகழேந்தி** எம்.ஏ., எம்.ஃபில்., அவர்கள்
தலைவர் : கோவைத் தமிழ்ச்சங்கம்

தலைப்பு : **இன்றைய இல்வாழ்க்கை துன்பம் சூழ்ந்ததா ? இன்பம் நிறைந்ததா ?**

**துன்பம் சூழ்ந்ததே !**

இலக்கியச் செல்வர். முனைவர். **தமிழ்நெஞ்சன்** அவர்கள்.
நகைச்சுவை திலகம். **புலவர் தமிழ்முருகன்** எம்.ஏ., எம் எட்.,

**இன்பம் நிறைந்ததே !**

கவிஞர். **தமிழரசி** எம்.ஏ., எம்ஃபில்., அவர்கள்
புலவர். **பொன்.பூங்கொடி** எம்.ஏ., எம்ஃபில்.,

நிகழ்ச்சி ஏற்பாடு :

திரு. **துரைசாமி சரவணன்** B.E., குடும்பத்தார். துரை & கோ. சாயிபாபா காலனி. கோவை
திரு. **பி.ஆர். கோபால்சாமி** ஸ்ரீ பண்ணாரி அம்மன் மில்ஸ். 17/28 முத்தையன் கோயில் லே அவுட். திருப்பூர். 4.

---

**இரவு 9.00 மணி**
**திருக்கோயில் வளாகம்**

### வழக்காடு மன்றம்

நடுவர் : கவிஞர் திலகம், தொலைக்காட்சிப்புகழ் **மானூர். புகழேந்தி** எம்.ஏ., எம்.ஃபில்., அவர்கள்

வழக்கு : **அடியார்கள் சோதனையில் பெரிதும் முன்னின்று இறையாண்மை காத்தவர் பெண்கள் என்பது குற்றமே !**

வழக்குத் தொடுப்பவர் : செந்தமிழ்த்திலகம். முனைவர். **சிவசெந்தில்** அவர்கள்
வழக்கு மறுப்பவர் : நாவுக்கரசி.கவிஞர். **தமிழரசி** எம்.ஏ., எம்.ஃபில்., அவர்கள்
நிகழ்ச்சி ஏற்பாடு : **நிலா இலக்கிய அறக்கட்டளை** கோவை.

---

## 10.04.2017 திங்கட்கிழமை

**காலை 7.30 மணி**
**திருக்கோயில் வளாகம்**

### மங்கள இசை

திரு. **எஸ். சதீஸ்குமார்** - தவுல்
திரு. **டி.ஜி. உதயசங்கர்** - தவுல்
திரு. **P. கோவிந்தசாமி** - நாதஸ்வரம்
திரு. **M.R. ஜெயக்குமார்** - நாதஸ்வரம்

நிகழ்ச்சி ஏற்பாடு : திரு. **P.S. இராமலிங்கம்** நிலக்கிழார், இராமபையலூர், சிக்கரசம்பாளையம்.

---

**காலை 9.00 மணி**
**திருக்கோயில் வளாகம்**

புலவர் : **ம.சிவசங்கரி** எம்.ஏ., எம்.ஃபில்., அவர்கள் வழங்கும்

### ஆன்மீகச் சொற்பொழிவு

தலைப்பு : **"அருள்வடிவே அம்பிகை"**

நிகழ்ச்சி ஏற்பாடு : ஏழூர் பேட்ரிக் **கண்ணா** என்கிற **வெங்கடுசாமி** நினைவாக பண்ணாரியம்மன்பக்தர்கள். குழு. ஏழூர்.
திரு. K.S. **சீனிவாசன், பாரதி** ராஜலட்சுமி நகை மாளிகை, காங்கயம்.

---

**பிற்பகல் 3.00 மணி**
**திருக்கோயில் வளாகம்**

குறிஞ்சிப்பாடி கம்பன் **எஸ்.கே வைத்தியநாதன்** அவர்கள் வழங்கும்

### ஆன்மீகச் சொற்பொழிவு

நிகழ்ச்சி ஏற்பாடு : திரு. **கே.எம். பச்சியப்பன்** முகவர் அணியினர் எல்.ஐ.சி. கோபிசெட்டிபாளையம்

---

**இரவு 6.00 மணி**
**கிழக்குப்புற மேடை**

பக்தி இன்னிசைப்பாடகர் TRM அவர்களின் இசை வாரிசு மேல்நாட்டுப்புகழ்
**சென்னை சிவதாசன்** குழுவினர் வழங்கும் **மாபெரும்**

### பக்தி இன்னிசை நிகழ்ச்சி

நிகழ்ச்சி ஏற்பாடு : சினாபுரம் கொங்கு வேளாளர் தொழில் நுட்பக்கல்லூரி.
சாரு மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, சத்தியமங்கலம்.
டாக்டர்.அரிமா. ஆ.பழனிச்சாமி, தலைவர். பண்ணாரி கல்வி அறக்கட்டளை.
தூக்கநாயக்கன்பாளையம்

tnhrce.org

| | |
|---|---|
| இரவு 8.30 மணி<br>கிழக்குப்புற மேடை | கலைச்சங்கமம் வழங்கும்.<br>தேசிய விருது கவிஞர் **பா.விஜய்** அவர்களின் **கவிமழையுடன்**<br>கின்னஸ் புகழ் புளியம்பட்டி **ஸ்ரீ நந்தா நாட்டியாலயாவின்**<br>மாபெரும் **பரதநாட்டிய நிகழ்ச்சி** மற்றும்<br>கலை இளமணி **தொல்காப்பியனின் சிலம்பாட்ட நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : அட்சயா எலக்ட்ரானிக்ஸ் & ஹோம் அப்ளையன்ஸ், ஸ்ரீராம் மோட்டார்ஸ்,<br>ஸ்ரீ மகேந்திரா ஜீவல்லர்ஸ், மாடர்ன் வோல்டு டைல்ஸ், ஸ்ரீராகவேந்திரா இண்டஸ்ட்ரீஸ்,<br>ஆண்டாள் எர்த் மூவர்ஸ் சத்தி, அம்மா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி பு.புளியம்பட்டி. |
| இரவு 11.00 மணி<br>கிழக்குப்புறமேடை | 36 மணி நேரம் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தி உலக சாதனைபுரிந்த<br>**லக்ஷ்மன் ஸ்ருதி குழுவினரின்**<br>**பிரமாண்டமான இன்னிசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : **சக்தி மசாலா** ஈரோடு. |
| மாலை 6.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | **12.04.2017 புதன்கிழமை**<br>ஈரோடு இராஜயோக தியான நிலைய பிரம்மா குமாரிகள் வழங்கும்<br>**ஆன்மிகச் சொற்பொழிவு**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : **பிரஜா பிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வர்ய விஷ்வ வித்யாலயா,** ஈரோடு -1 |
| இரவு 8.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | பவானி - குமாரபாளையம் அன்னை ஜே.கே.கே சம்பூரணியம்மாள் இசைக்குழுவின்<br>**கம்ப்யூட்டர் எலக்ட்ரானிக் இன்னிசை**<br>மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்களால் நடத்தப்படும்<br>**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : **டாக்டர். ஜே.கே.கே. முனிராஜா** எம்.டெக்.,<br>தாளாளர், **அன்னை ஜே.கே.கே சம்பூரணியம்மாள் அறக்கட்டளை** பவானி, கொமாரபாளையம். |
| மாலை 3.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | **14.04.2017 வெள்ளிக்கிழமை**<br>ஓம் ஸ்ரீ நிருத்திய நடேச கலாலயா கலைகளின் கோயில் வழங்கும்<br>**பரதநாட்டிய நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : நாட்டியக் கலைச்சுடர். **C. ஜெயப்பிரகாஷ் நாராயணன்**<br>குமாரபாளையம். |
| இரவு 8.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | ஸ்ரீ சாய் நாட்டியாலயா ஜெ.ஜெ. கிராக்கர்ஸ் ஆர்க்கெஸ்ட்ரா வழங்கும்<br>**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : **ஸ்ரீ சாய் நாட்டியாலயா ஜெ.ஜெ. கிராக்கர்ஸ் ஆர்க்கெஸ்ட்ரா**<br>நம்பியூர். |
| இரவு 7.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | **16.04.2017 ஞாயிற்றுக்கிழமை**<br>மதுரை ஸ்ரீ கிருஷ்ணபிரியா வழங்கும்<br>**ராகமஞ்சரி இசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு :<br>திரு. **கரு. சுப்பிரமணியம்,** பண்ணாரியம்மன் இறக்குமதி & ஏற்றுமதி, மதுரை. |

tnhrce.org

# 17.04.2017 திங்கட்கிழமை மறுபூசைத் திருவிழா நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை 9.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | **பட்டிமன்றம்**<br>வரவேற்புரை : திருக்குறள் **அ. தேவராஜ்** தாசப்பகவுண்டன்புதூர்<br>நடுவர் : புலவர். **செம்பியன்** அவர்கள், கோபிசெட்டிபாளையம்<br>தலைப்பு : பணம் நமது வாழ்க்கைக்குப் பலமா ? பலவீனமா ?<br>**பலமே !**<br>பாமணி. **பெரு. தமிழ்வேந்தன்** பவானிசாகர்<br>செல்வன். **எ. சதீஸ்குமார்** பி.எஸ்சி., கோவை<br>செல்வி. **அ.தீபிகா** பி.ஏ., கோவை<br>**பலவீனமே !**<br>புலவர். **மு.சபேசன்** காரமடை<br>செல்வன். **சி. ஆதர்சன்** பி.எஸ்சி., கோவை<br>செல்வி. **மா. பூர்ணாஸ்ரீ** பி.எஸ்சி., கோவை<br>நிகழ்ச்சி ஏற்பாடு : மெஸர்ஸ். **பி.எஸ்.ஆர். அன்சன்ஸ்**. சில்க் சாரீஸ், கிராஸ்கட் ரோடு, கோவை - 12.<br>திருக்குறள். **அ. தேவராஜ்**. தாசப்பகவுண்டன்புதூர். |
| நண்பகல் 1.00 மணி<br>திருக்கோயில் வளாகம் | **பட்டிமன்றம்**<br>நடுவர் : புலவர். **இரா. வெங்கடேசன்** எம்.ஏ., எம்.எட்., எம்ஃபில் அவர்கள், ஏழூர்<br>தலைப்பு : நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் பாடல்களைத் தந்தவர்கள்<br>இன்றையத் திரைக்கவிஞர்களா ? அன்றையத் திரைக் கவிஞர்களா ?<br>**அன்றையக் கவிஞர்களே !**<br>பாமணி. **பெரு. தமிழ்வேந்தன்** பவானிசாகர்<br>வளர்கவி. **இராதாகிருஷ்ணன்** கோவை<br>**இன்றையக் கவிஞர்களே !**<br>புலவர். **மு.சபேசன்** காரமடை<br>**சித்ரா சுப்பிரமணியன்** புன்செய்புளியம்பட்டி<br>நிகழ்ச்சி ஏற்பாடு :<br>சித்த மருத்துவர் திரு. **எஸ். கே. வேல்முருகன்**, திருமதி. **எஸ்.வி.கவிதா**, **எஸ்.வி. சுபாஷினி**, **ஸ்ரீவிசால்**,<br>ஸ்ரீ கிருஷ்ணா மெடிக்கல், அருள்மிகு மாசாணி பத்ரகாளியம்மன் திருக்கோயில், கோட்டுவீராம்பாளையம்.<br>திரு. **எஸ். கே. பழனிச்சாமி** வீனஸ் டெய்லர், சத்தி-1. |
| மாலை 4.30 மணி<br>திருக்கோயில் வளாகம் | கோபி **G.V. அருணின்** ஸ்ரீ அனுபல்லவி ஆர்க்கெஸ்ட்ரா வழங்கும்<br>**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : திரு.**G.V. அருண்** ஸ்ரீ அனுபல்லவி ஆர்க்கெஸ்ட்ரா, கோபிசெட்டிபாளையம். |
| மாலை 6.00 மணி<br>கிழக்குப்புற மேடை | **கிரிஹரனின்** ராகஸ்ரீ ஆர்க்கெஸ்ட்ரா வழங்கும்<br>**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : **கிரிஹரனின்** ராகஸ்ரீ ஆர்க்கெஸ்ட்ரா, கோபிசெட்டிபாளையம் |
| இரவு 8.30 மணி<br>திருக்கோயில் வளாகம் | மயிலாடுதுறை **ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபா** வழங்கும்<br>**பொம்மலாட்ட நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : திரு. **ஏ. சரவணன்**, நெ.77, 12வது கிராஸ், கல்யாண் நகர், டி. தாசரஹள்ளி, பெங்களூர் - 57 |
| இரவு 9.00 மணி<br>கிழக்குப்புற மேடை | **ராஜாவின் கோவை ராகஸ்ரீ ஆர்க்கெஸ்ட்ரா** வழங்கும்<br>**பக்தி இன்னிசை நிகழ்ச்சி**<br>நிகழ்ச்சி ஏற்பாடு : **சாய்ராமின் ஸ்டார்லைட்** கோபிசெட்டிபாளையம் |

காவல் துறையின் அறிவுரைப்படி குண்டம் திருவிழா நிகழ்ச்சிகளைக் கண்காணிக்க
**சி..சி.டி.வி.** மூலம் ஒளிப்பதிவு செய்யப்படுகிறது.
ஏற்பாடு : **சதன் சாரீஸ், சதன் மில் கம்பெனி, சதன் ரெடிமேட்ஸ்,** ஈரோடு.

tnhrce.org

## உழவாரப்பணி

திருக்கோயில் மற்றும் அதனைச் சார்ந்த சுற்றுப்புறங்களைத் தொடர்ந்து தூய்மைப்படுத்தும் உழவாரப்பணிக்கு, பக்தர்கள் குழுக்களாகவோ, அமைப்பாகவோ, மன்றங்களாகவோ வரவேற்கப்படுகிறார்கள். சைவ சமயப் பெரியோரான அப்பரால் பக்தியுடன் செய்யப்பட்ட மேற்படி உழவாரப்பணியினை பக்தர்களும் மேற்கொண்டு அம்மன் அருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## கருணை இல்லம்

ஏழை, எளிய மற்றும் ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்களைப் பராமரிப்பதற்கான கருணை இல்லம் ஒன்று இத்திருக்கோயிலின் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி கருணை இல்லத்திற்கு பக்தர்கள் பொருளாகவோ, பணமாகவோ நன்கொடையளித்து அம்மன் அருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## மஞ்சள் குங்குமம்

திருக்கோயிலின் மூலம் தரமான மஞ்சள் குங்குமம் நேரடியாக தயாரிக்கப்பட்டு கிலோ 1-க்கு ரூ. 300 வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பக்தர்கள் இதனை வாங்கிப் பயன்படுத்தி அம்மன் அருள் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## ஈரோடு மாவட்டத் திருக்கோயில்கள் வழிகாட்டிப் புத்தகம்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற திருக்கோயில்களின் புகைப்படத்துடன் கூடிய விரிவான வரலாறு அடங்கிய வழிகாட்டிப் புத்தகம் ஒன்றின் விலை ரூ. 100/- மட்டும். பக்தர்கள் வாங்கி பயன்பெறுவீர்.

## E-POOJA மற்றும் E-DONATION

இத்திருக்கோயிலுக்குப் பூஜைக்கட்டணம் மற்றும் நன்கொடைகள் அனுப்ப விரும்புகிறவர்களின் வசதிக்காக **E-POOJA** மற்றும் **E-DONATION** வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனுப்ப வேண்டிய முகவரி : BANNARI MARIAMMAN THIRUKKOIL

வங்கி கணக்கு எண் : 1188155000127160 IFSC CODE : KVBL0001188 BRANCH : KVB SATHYAMANGALAM.

## கோசாலை

இத்திருக்கோயிலில் கோசாலை ஒன்று இயங்கி வருகிறது. மேற்படி கோசாலையில் மூன்று பசுக்களும் இரண்டு காளைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கோசாலையிலுள்ள பசுமாடுகள் மூலம் கிடைக்கப்பெறும் பால் தினசரி 4 காலப் பூஜைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பசுக்களுக்குத் தேவையான தீவனங்களையும், அகத்திக்கீரை, தவிடு, புண்ணாக்குப் போன்ற உணவுப் பொருட்களையும் வழங்கி அம்மன் அருள்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## ஓய்வறைகள், சத்திரங்கள் மற்றும் திருமண மண்டபம்

பக்தர்கள் நலன் கருதி இத்திருக்கோயிலில் தங்குவதற்கான ஓய்வு விடுதிகள், விருந்துகள் மற்றும் சுப நிகழ்ச்சிகள் செய்வதற்கான சத்திரங்கள், திருமண மண்டபம் ஆகியவைகள் வாடகைக்கு விடப்படுகின்றன. பக்தர்கள் அவைகளைப் பயன்படுத்தி அம்மன் அருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## நட்சத்திரச் சிறப்புக்கொண்ட மரங்களுடன் பூங்கா அமைத்தல்

இத்திருக்கோயில் சார்பில் 27 நட்சத்திரங்களுக்குண்டான மரங்கள் வைத்து பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா அமைக்கப் பக்தர்கள் தங்களது ஒத்துழைப்பினை நல்கி அம்மன் அருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


## வைர அட்டை திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க அன்னதானத்திட்டத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 7 லட்சம் நன்கொடை வழங்குவோர்க்கு "வைர அட்டை" மூலமாக, தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் நன்கொடையாளர் குடும்பத்தார் 7 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்குச் சிறப்பு, சுவாமி தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

## பிளாட்டினம் அட்டை திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க திருக்கோயிலுக்கு ரூ.1 கோடி மற்றும் அதற்கு மேலும் நன்கொடை வழங்குவோர்க்கு " "பிளாட்டினம் அட்டை" மூலமாக நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் 10 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்குச் சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்
## தோற்றத்தின் வளர்ச்சி



1952



1960



1992



2017

## அன்னதானத் திட்டம்

இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் கடந்த 23-3-2002 முதல் அனைவரும் பாராட்டப்படும் வண்ணம் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. பசியோடு வரும் பக்தர்களுக்கு பகல் 12.15 மணிக்கு அன்னதானம் பரிமாறப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் பங்குகொள்ள விரும்பும் உபயதாரர்கள் கீழ்க்கண்ட விபரப்படி கட்டணத்தைச் செலுத்தி அவரது பிறந்த நாள். திருமண நாள் மற்றும் முன்னோர்களின் நினைவு நாள் அல்லது உபயதாரர் விரும்பும் நாள் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு நாளை பதிவு செய்து கொண்டால் அதன்படி அன்னதானம் வழங்கப்படும்.

### அன்னதானத் திட்டம் விபரப் பட்டியல்

| வ. எண் | பயனடையும் நபர்கள் | நாட்கள் | ஒரு நாள் கட்டணம் | நிரந்தரக் கட்டளை |
|---|---|---|---|---|
| 1. | 200 நபர்களுக்கு உணவு படைக்க | செவ்வாய். புதன். வியாழன் & சனி | ரூ. 4.000/- | ரூ. 40.000/- |
| 2. | 400 நபர்களுக்கு உணவு படைக்க | ஞாயிறு. திங்கள் & வெள்ளி | ரூ. 8.000/- | ரூ. 80.000/- |
| 3. | 1000 நபர்களுக்கு உணவு படைக்க | அமாவாசை தினங்கள் | ரூ. 20.000/- | ரூ. 2.00.000/- |

(மேற்கண்ட முதலீடுகளுக்கு 80- G ன் படி வருமான வரி விலக்கு உண்டு)

**அன்னதானத்திற்கு நிதி அளிக்கப்பட வேண்டிய முகவரி :**

**திட்ட நிர்வாகி, அன்னதானத் திட்டம்**

**அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி - 638 401.**

## திருக்கோயில் கட்டண விபரம்

1. குங்குமப் பாக்கெட் 1-க்கு ரூ. 3.00
2. அர்ச்சனை ரூ. 3.00
3. அபிசேகம் (பால்) ரூ. 10.00
4. முடி காணிக்கை ரூ. 10.00
5. நாமகரணம் ரூ. 10.00
6. அமுதூட்டல் ரூ. 10.00
7. உபய காணிக்கை ரூ. 10.00
8. வரம் பூஜை ரூ. 15.00
9. திருவிளக்குப் பூஜை ரூ. 20.00
10. 2 சக்கர வாகனப் பூஜை ரூ. 25.00
11. திருக்கோயில் வரலாறு ரூ. 25.00
12. கால அபிசேகம் ரூ. 30.00
13. காது குத்துதல் ரூ. 30.00
14. தனி அனுமதிக் கட்டணம் ரூ. 15.00
15. சிறப்புத் தனி அனுமதிக் கட்டணம் ரூ. 30.00

16 விசேச சிறப்புத் தனி அனுமதி ரூ. 50.00
17 4 சக்கர வாகனப் பூஜை (கார்) ரூ. 50.00
18. 4 சக்கர வாகனப் பூஜை (பஸ். லாரி) ரூ. 75.00
19. கேமரா மூலம் புகைப்படம் எடுக்க ரூ. 50.00
20. புதுக் கணக்குப் பூஜை ரூ. 201.00
21. வீடியோ. புகைப்படம் எடுத்தல் ரூ. 250.00
22. திருமணக் காணிக்கை ரூ. 250.00
23. அபிசேகக் கட்டணம் (பொருள் உட்பட) ரூ. 250.00
24. தங்கக் கவசம் சாற்றுப்படி ரூ. 750.00
25. தங்கத் தேர் கட்டணம் ரூ. 1000.00
26. ஓய்வு விடுதி (நாள் ஒன்றுக்கு வாடகை) ரூ. 250.00
ரூ. 400.00. ரூ. 500.00. ரூ. 750.00
27. சத்திரம் ரூ. 1000.00 ரூ. 1200.00
28. திருமண மண்டபம் ரூ. 20000.00

(மேற்கண்ட கட்டணங்கள் மாறுதல் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)

**குண்டம் சிறப்பு அனுமதி பாஸ் இல்லை.**




## திருக்கோயில் திங்களிதழ்

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறையால் நேரடியாக திங்கள் தோறும் வெளியிடப்படும் திருக்கோயில் திங்களிதழில் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள், வரலாற்றுச் சிறப்புகள், அரிய தகவல்கள் மற்றும் பரிகார வழிமுறைகள், புகைப்படங்கள் உள்ளிட்ட அரிய பல தகவல்கள் அடங்கியுள்ளன. பக்தர்கள் வாங்கிப் பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இதழ் ஒன்றின் விலை ரூ. 15/-

குண்டம் இறங்கும் நிகழ்ச்சியினை
**www.bannariammantemple.tnhrec.in** என்ற
இணையதளம் மூலம் உலக மக்கள்
அனைவரும் நேரடியாகக் கண்டுகளிக்கலாம்.
– திருக்கோயில் நிர்வாகம்.